# க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2015

| தமிழ் I | மூன்று மணித்தியாலம் |
| --- | --- |

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி I இல் உள்ள **இரு** வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

**1.** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) "பாணன் சூடிய பசும்பொற் றாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட் டசைஇ
ஊரீர் போலச் சுரத்திடை யிருந்தனிர்
யாரீ ரோவென வினவ லானாக்
காரெ னொக்கற் கடும்பசி யிரவல
வென்வே லண்ணற் காணா வூங்கே
நின்னிலும் புல்லியே மன்னே யினியே
இன்னே மாயினே மன்னே ...."

(அ) இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
(ஆ) இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள உவமை அணியை விளக்குக.
(இ) இச்செய்யுள் மூலம் எடுத்துக்காட்டப்படும் புறத்திணைப் பொருள் மரபினைத் தெளிவுபடுத்துக.
(ஈ) புரவலனிடம் பொருள்பெற்ற பாணனின் செல்வச் செழிப்பு விபரிக்கப்படுமாற்றினைக் குறிப்பிடுக.

(ii) வீழ்ந்தான் வீழா வெந்துய ரத்தின் கடல்வெள்ளத்து
ஆழ்ந்தான் ஆழா அக்கட லுக்கோர் கரை காணான்
சூழ்ந்தாள் துன்பம் சொற்கொடி யாள்சொல் கொடுநெஞ்சம்
போழ்ந்தாள் உள்ளப் புன்மையை நோக்கிப் புலர்கின்றான்

"ஒன்றா நின்ற ஆருயி ரோடும் உயிர்கேள்வர்
பொன்றா முன்னம் பொன்றினர் என்னும் புகழ் அல்லால்
இன்றோர் காறும் எல்வளை யார்தம் இறையோரைக்
கொன்றார் இல்லை கொல்லுதி யோநீ கொடியோளே"

(அ) இச்செய்யுள்கள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
(ஆ) இச்செய்யுட் பகுதியில் இடம்பெற்றுள்ள உருவக அணியினை விளக்குக.
(இ) கைகேயியின் கொடுந்தன்மை விபரிக்கப்பட்டிருக்குமாற்றைத் தெளிவுபடுத்துக.
(ஈ) இல்லறத்தைப் பேணிநிற்கும் பெண்களது புகழின் அடையாளமாக வெளிப்படுத்தப்படுவது யாது?

(24 புள்ளிகள்)

The National e-Learning Portal for The General Education

[ பக் 2 ஐப் பார்க்க

**2.** **'அ'** பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.

**அல்லது**

**'ஆ'** பகுதியிலுள்ள உரைநடைப் பகுதியைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.

**பத்திரிகை**

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்!
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்தபத் திரிகைப் பெண்ணே.

அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப் பெண்ணேயுன்
நலம்காணார் ஞாலம் காணார்.

கடும்புதர் விலக்கிச் சென்று
களாப்பழம் சேர்ப்பார் போலே
நெடும்புவி மக்கட் கான
நினைப்பினில் சென்று நெஞ்சிற்
படும்பல நுணுக்கம் சேர்ப்பார்
படித்தவர், அவற்றை யெல்லாம்
கொடும்என அள்ளி உன்தாள்
கொண்டார்க்குக் கொண்டு போவாய்!

வானிடை நிகழும் கோடி
மாயங்கள் மாநிலத்தில்
ஊனிடை உயிரின் வாழ்வின்
உட்புறம் வெளிப்புறத்தே
ஆனநற் கொள்கை அன்பின்
அற்புதம் இயற்கைக் கூத்துத்
தேனிதழ் தன்னிற் சேர்த்துத்
தித்திக்கத் தருவாய் நித்தம்

சிறுகதை யொன்று சொல்லிப்
பெருமதி யூட்டும் தாளே
அறைதனில் நடந்த வற்றை
அம்பலத் திழுத்துப் போட்டுக்
கறையுளம் தூய்மை செய்வாய்!
களைப்பிலே ஊக்கம் பெய்வாய்!
நிறைபொருள் ஆவாய் ஏழை
நீட்டிய வெறுங்கரத்தே!

ஓவியம் தருவாய்! சிற்பம்
உணர்விப்பாய்! கவிதை யூட்டக்
காவியம் தருவாய்! மக்கள்
கலகல வெனச் சிரிப்பு

[ பக் 3 ஐப் பார்க்க

மேவிடும் விகடம் சொல்வாய்!
　　மின்னிடும் காதல் தந்து
கூவுவாய்! வீரப் பேச்சுக்
　　கொட்டுவாய் கோலத் தாளே.

தெருப் பெருக் கிடுவோருக்கும்
　　செகம் காக்கும் பெரியோர்க்கும், கை
இருப்பிற் பத்திரிகை நாளும்
　　இருந்திடல் வேண்டும்! மண்ணில்
கருப்பெற் றுருப்பெற் றிளநடை
　　பெற்றுப் பின்னர் ஐந்தே ஆண்டு
வரப்பெற்றார் பத்திரிகை நாளும்
　　உண்டென்றால் வாழ்க்கை பெற்றார்.

(i) பத்திரிகையின் பிறப்பிற்குக் காரணமாகப் பாரதிதாசன் குறிப்பிடுவது யாது?

(ii) பத்திரிகை சிறுவயது தொட்டே படிக்கப்படல் வேண்டும் என்பது கவிதையில் எவ்வாறு வலியுறுத்தப்படுகிறது?

(iii) பத்திரிகைப் பெண்ணின் பணிகளாக இக்கவிதையில் எடுத்துக்காட்டப்படுபவை யாவை?

(iv) கவிஞரின் கருத்து வெளிப்பாட்டு நுட்பங்களைத் தெளிவுபடுத்துக. (16 புள்ளிகள்)

**அல்லது**

(ஆ) சிறிது காலத்தின் பின் அமெரிக்க மிசன் முன்னே நைற்றின் கீழ் தொடங்கிய தமிழ் ஆங்கில அகராதி வேலையைத் துரிதப்படுத்தியது. அதற்குப் புதிதாகக் கச்சிங்ஸ் என்பவரையும் ஸ்போல்டிங்ஸ் என்பவரையும் அகராதிக் குழுவிற் சேர்த்தது. ஈற்றில், வண.எம் வின்சிலோ அதனை ஒழுங்காக்கி 1862 ஆம் ஆண்டு சென்னையில் அச்சிட்டு வெளியிட்டார். யாழ்ப்பாணத்தில் இருந்த தமிழ்ப் பண்டிதர்களே அவ்வகராதியிற் காணும் சொற்கள் யாவற்றையும் தேடி எடுத்துச் சேர்த்தனர். சென்னையில் அச்சிடும் போது அக்காலத்திலிருந்த தமிழ் வித்துவான்களாகிய இராமானுசக் கவிராயர், விசாகப் பெருமாளையர், வீரசாமிச் செட்டியார் ஆகியோரும் உதவி புரிந்தனர்.

இப்பெரிய தமிழ் ஆங்கில அகராதி தமிழ்மொழியிலுள்ள பேச்சு வழக்கு மொழிச் சொற்களையும் செய்யுள் வழக்கு மொழிச் சொற்களையும் தன்னகத்தே அடக்கியுள்ளது. அதனோடு வானநூல், சோதிடநூல், பயில்நூல், வேதிநூல், பூதநூல், விலங்கியல்நூல், புராணம் ஆகியவற்றில் வழங்கும் சொற்களையும் கொண்டது. நூலாசிரியர், புலவர், இலக்கியங்களில் வரும் கதாபாத்திரங்கள், தேவர் ஆகியோரின் பெயர் முதலியவையும் அதில் சேர்க்கப்பட்டுள்ளன. இதுகாறும் வெளிவந்த அகராதிகளில் வெளிவராத பலமுறைகள் அதிலுள்ளன. தமிழரின் சமயம், சரித்திரம், பழக்கவழக்கம் ஆகியன பற்றிய பல செய்திகளையும் அறிந்துகொள்ளலாம். இவ்வகராதியில் 67,000 சொற்கள் அடங்கியுள்ளன. தமிழில் வழங்கும் வடசொல் யாவற்றிற்கும் உடுக்குறி போடப்பட்டிருக்கும். இதனால் வடசொல் எது தமிழ்ச்சொல் எது என்று எளிதில் அறிந்துகொள்ளலாம்.

ஆகவே, கிறித்து சமயத்தை பரப்புவதற்கு ஒரு கருவி நூலாக எழுந்தபோதும் ஈற்றில் யாவருக்கும் பயன்படும் ஒரு பெருநூலாக அது முடிந்தது. மானிப்பாய் அகராதியின் பின் தமிழ் அகராதி ஒன்றும் தமிழ்நாட்டில் வெளிவரவில்லை. பல குறைகள் இருந்தபோதிலும் இவ்வகராதி சென்னையில் பலமுறை அச்சுவாகனமேறிற்று. ஏனெனில், ஆங்கிலம் அறியாத தமிழர்க்கு அதுவே ஒரேயொரு அகராதியாய் இருந்தது. ஒவ்வொரு பதிப்பிலும் இதற்குச் சொற்களைச் சேர்த்துப் பெருக்கினர். சொற்களைக் கூட்டக் கூட்டக் கடைசியில் இருந்த அளவினின்றும் அது மிகப் பெரியதாய் வளர்ந்தது. அதனால் ஈற்றில் யாழ்ப்பாண அகராதி அல்லது மானிப்பாய் அகராதி என்ற அதன் பெயர் மாறிப் “பேரகராதி” அல்லது “விரிவகராதி” என்று அழைக்கப்பட்டது.

(i) நைற் என்பவர் தலைமையில் தொகுக்கப்பட்ட தமிழ்-ஆங்கில அகராதியில் உள்ளடக்கப்பட்டிருந்த தனித்துவமான விடயங்கள் எவை எனக் கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்றார்.

(ii) அகராதித் தொகுப்பு முயற்சியில் தமிழ் அறிஞர்களின் பங்களிப்பும் கணிசமான அளவில் இருந்தது என்பது எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது.?

[ பக் 4 ஐப் பார்க்க

(iii) மானிப்பாய் அகராதி தமிழ்நாட்டில் மீண்டும் மீண்டும் பதிப்புப் பெற்றமைக்கான காரணங்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?

(iv) ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரைக்க. (16 புள்ளிகள்)

## பகுதி II

**3.** **'வினைத்தூய்மை'** என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) வினைத்தூய்மையின் சிறப்பு

(ஆ) பாவமும் பழியும் தருகின்ற செயல்களைச் செய்யாமை

(இ) வினைத்தூய்மையின் பயனும் வினைத்தூய்மை இன்மையின் தீமையும்

(ஈ) வள்ளுவர் உவமை அணியினைக் கையாளுந் திறன். (20 புள்ளிகள்)

**4.** **கைகேயி சூழ்வினைப்படலத்தில்** கைகேயி இரு வரங்களைக் கேட்டது முதல், "மண்ணே கொள் நீ மற்றையதொன்றும் மற" என்று தசரதன் கூறியது வரையான பகுதியில்

(அ) தசரதனின் பெருமை

(ஆ) இராமன் மீது தசரதன் கொண்டிருந்த பாசம்

(இ) கைகேயி மீது தசரதனுக்கு ஏற்பட்ட வெறுப்பு

(ஈ) பரதனுக்கு ஆட்சியுரிமை கிடைப்பது குறித்த தசரதனின் நிலைப்பாடு

என்பன எடுத்துக்காட்டப்படுமாற்றினைத் தெளிவுபடுத்துக. (20 புள்ளிகள்)

**5.** தேம்பாவணியின் **பைதிரம் நீங்குபடலத்தினை** ஆதாரமாகக் கொண்டு,

(அ) எசித்து நாட்டிற்கு ஏகுமாறு வானதூதுவன் வெளிப்படுத்திய செய்தி, சூசையைத் துன்பத்துக்குள்ளாக்கியமைக்கான காரணங்கள்.

(ஆ) 'இயேசுபாலன் உலகின் விடிவிற்காக உதித்தவர்' என்ற கருத்து வீரமாமுனிவரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் வகை

(இ) பிறைச்சந்திரோதய, சூரியோதயக் காட்சி விபரிப்பின் முக்கியத்துவம்

(ஈ) இடம்பெற்றுள்ள தற்குறிப்பேற்ற அணிகளின் சிறப்பு

என்பவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

**6.** **'மனவலிமை வேண்டும்'** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,

(அ) மனம் பண்படுவதற்கான வழிகள்

(ஆ) மனவலிமையின் தேவை

(இ) மனதை வலிமையுடையதாக்குவதற்குரிய வழிமுறைகள்

(ஈ) கட்டுரையாசிரியர் கையாண்ட மொழிநடை

என்பவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

**7.** **'ஒளி'** என்ற சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

அ. 'ஒளி' என்னும் தலைப்பு கதையுடன் பொருந்துமாற்றினைத் தெளிவுபடுத்துக.

ஆ. சட்டவிரோதச் செயலில் ஈடுபடுகிறோம் என்பதை அறிந்திருந்தும்கூட அச்செயலை நோக்கிக் கரீமைத் தூண்டிய பின்னணியை விளக்குக.

இ. இக்கதையில் ஹமீலா என்ற பாத்திரம் பெறும் இடத்தினைத் தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)

**8.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விபரிக்குக.

அ. **'பொங்குதிரை பொருத..........'** எனத் தொடங்கும் நற்றிணைப் பாடலில் தலைவியின் உணர்வு வெளிப்பாடு

ஆ. **'பெரியாழ்வார் திருமொழியில்'** யசோதை கண்ணனை நீராட அழைக்கும் பாங்கு

இ. காளமேகப் புலவரின் தனிப்பாடல்களில் காணப்படும் கவிச்சிறப்பு

ஈ. **'பூக்காரி'** என்ற கவிதையில் போருக்கான காரணங்களும் போரின் விளைவுகளும் குறிப்பாக உணர்த்தப்பட்டிருக்கும் தன்மை

உ. **'நீண்ட பயணம்'** என்ற நாவலின் தலைப்பினது பொருத்தப்பாடு.

(20 புள்ளிகள்)

The National e-Learning Portal for The General Education

# க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2015

| தமிழ் II | மூன்று மணித்தியாலம் |
|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி I இல் உள்ள **மூன்று** வினாக்களையும், பகுதி II இன் **“அ”** பிரிவிலிருந்து ஒரு வினாவையும் **“ஆ”** பிரிவிலிருந்து ஒரு வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

* முதலாம் வினாவின் ‘அ’ பகுதியிலுள்ள 20 வினாக்களும் தனியாகத் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதி அதனை உமது ஏனைய விடைத்தாள்களின் மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி I

**1.** (அ) **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 உதட்டுப்பல் ஒலியாக அமைவது
1. வ் 2. ட் 3. ண் 4. ழ் 5. ள் (......)

1.2 “எகர’ உயிர் வேறுபட்டு ஒலிப்பது
1. எட்டு 2. எளிமை 3. எறும்பு 4. எருது 5. எள்ளு (......)

1.3 உடனிலையாகவும் வேற்றுநிலையாகவும் மயங்கும் மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கை
1. 4 2. 2 3. 12 4. 10 5. 8 (......)

1.4 பகாப்பதமாக அமைந்த சொல்
1. பட்டம் 2. கொலை 3. கல்வி 4. கொடை 5. பாடுதல் (......)

1.5 தற்பவமாக அமையத்தக்கது
1. கமலம் 2. குங்குமம் 3. காரணம் 4. அபாயம் 5. பாக்கியம் (......)

1.6 வேற்றுமைத் தொகையாக அமையும் சொல்
1. தண்ணீர் 2. செந்நீர் 3. கண்ணீர் 4. சுடுநீர் 5. பன்னீர் (......)

1.7 குறிப்பு வினையாலணையும் பெயராக அமைவது
1. ஓடியவனை 2. படித்தவருக்கு 3. கண்டவனால்
4. நல்லவரோடு 5. பாடியவரது (......)

1.8 செயப்பாட்டு வினை விகுதிகளாக வருவன,
1. வி, பி 2. படு, உண் 3. க, இய 4. ஆய், ஈர் 5. ஆன், ஆர் (......)

1.9 ‘போ’ என்ற வினையைத் துணைவினையாகக் கொண்ட தொகுதி
1. வரப்போகிறார், எங்கே போகிறார்.
2. மாமா போகிறார், காலம் போகிறது
3. சந்தைக்குப் போனேன், பயந்து போனேன்
4. அமைதி போய்விட்டது, நான் போய் விடுவேன்
5. விழப் போகிறது, புறப்படப் போகிறார் (......)

The National e-learning Portal for The General Education

[ பக் 2 ஐப் பார்க்க

1.10 தனி வினையடையாக அமைந்த சொல்
1. வேகமாக 2. நடுவில் 3. தந்திரமாக 4. மெதுவாய் 5. சுவையாக (......)

1.11 இடைவினையாக இடம்பெறும் சொல்
1. இருப்பான் 2. எழுதுவார் 3. தின்பேன் 4. செய்வோம் 5. திறப்பாள் (......)

1.12 உடம்படுமெய்ப் புணர்ச்சி விதிக்கு பொருந்தி வராதது
1. பட்டாடை 2. பலாவிலை 3. பூவரசு 4. பனையோலை 5. கிளியலகு (......)

1.13 'ஆவது' என்னும் இடைச்சொல் குறைந்தபட்சம் என்னும் பொருள் உணர்த்துவது
1. பாணாவது இடியப்பமாவது சாப்பிடுவேன்
2. நீங்களாவது உதவி செய்யுங்கள்
3. நாம் எப்போதாவது சந்திக்கலாம்.
4. மழையாவது பெய்வதாவது
5. இரண்டாவது பரிசு (......)

1.14 மரூஉ வழக்காக அமைவது,
1. வாழ்நாள் 2. பாண்டியநாடு 3. அருமந்த
4. திகதி 5. பெயர் (......)

1.15 பின்வருவனற்றுள் ஒல்லாந்த மொழிச் சொல்
1. தோம்பு 2. சராசரி 3. விருது 4. அன்னாசி 5. பட்டாளம் (......)

1.16 இல் பொருள் உவமையாக அமையும் தொடர்
1. பெண்ணிலா ஊரில் பிறந்தாரைப் போல
2. உள்ளீடில்லாத பதர் போல
3. அழலருகே சேர்ந்த மலர் போல
4. விளக்கு மாற்றுக்குப் பட்டுகுஞ்சம் கட்டியது போல
5. உருள் பெருந்தேருக்கு அச்சாணி போல

1.17 மென்மையான சூடு என்ற பொருளைத் தரும் இரட்டைக் கிளவி
1. படபட 2. தளதள 3. கதகத 4. கசகச 5. பொலுபொலு (......)

1.18 பின்வருவனவற்றுள் வழு வாக்கியம்
1. கழனிகளில் நெல் விளைந்திருந்தது
2. பாட்டி பனையோலையால் பாய் இழைத்தார்
3. ஒவ்வொரு பூவும் மலர்ந்தது.
4. இலங்கையின் கலாசாரம் உன்னதமானது
5. அவன் சிறிது நாட்களின் பின் திரும்பினான் (......)

1.19 பின்வருவனவற்றுள் கூட்டுப் பெயராக வருவது
1. பொருளியல் 2. தொடர்ச்சி 3. ஏவுகணை 4. சமத்துவம் 5. ஏற்றுமதி (......)

1.20 "நீங்கள் பார்த்த அல்லது நடித்த நாடகத்தைப் பற்றிக் கூறுங்கள்" என்னும் கூட்டு வாக்கியம் கொண்டமையும் தொடர்கள்
1. வினைத் தொடர்கள் 2. பெயரெச்சத் தொடர்கள்
3. பெயரடைத் தொடர்கள் 4. பெயர்த் தொடர்கள்
5. வினையடைத் தொடர்கள் (......)

(20 புள்ளிகள்)

The National e-Learning Portal for The General Education

[ பக் 3 ஐப் பார்க்க

ஆ. பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1. ‘அவன் வருந்தினான்’, ‘அவன் வருத்தினான்’ - இவ்விரு வாக்கியங்களையும் இலக்கண அடிப்படையில் வேறுபடுத்திக் காட்டுக.
2. நெடிற்றொடர்க் குற்றியலுகரகரத்திற்கும் உயிர்த் தொடர்க் குற்றியலுகரத்திற்குமிடையிலான வேறுபாட்டினைத் தெளிவுபடுத்துக.
3. நீங்கல் வேற்றுமையின் பருப்பொருள் சார்ந்த இடம், பருப்பொருள் சாராத இடம் ஆகியவற்றை உதாரணம் தந்து விளக்குக.
4. மெய்யீற்றுப் புணர்ச்சியை உதாரணம் தந்து விளக்குக.
5. துணைநிலை ஆக்கத்தொடர் அமைந்த வாக்கியம் ஒன்றுக்கு உதாரணம் தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியின் சாராம்சத்தை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

இன்று செய்யுளிலும் இசைப்பாட்டிலும் எளிமை புகுந்துள்ளது. பொது மக்கள் இலக்கியம் என்பது தமிழில் தொடர்ந்து விளங்கிக் கொண்டே வந்துள்ளது. ஆனால், கற்றோரது இலக்கியமென ஒருவகை எழுந்து பொதுமக்கட்கும் கற்றோர்க்கும் இடையே ஒரு பெரிய பிளவினை ஏற்படுத்தியது. நாயன்மார்கள் ஆழ்வார்கள் எழுதிய பாடல்கள் பொதுமக்கள் உள்ளத்தைக் கவர்ந்தாலும் பழைய இலக்கண உரையாசிரியர்கள் பெரும்பாலோர் இவற்றைப் பற்றியதோர் இருட்டடைப்பினை விளைவித்திருக்கக் காண்கின்றோம். கம்பனும் இந்த இருட்டடைப்புக்கு உட்பட்டே உள்ளான். திருப்புகழையோ தாயுமானவரையோ, பின்வந்த உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டக் காணோம். சிலப்பதிகாரத்தைக் கோவலன் கதையெனவும் இராமாயணத்தை இராமன் கதையெனவும் எள்ளிநகையாடும் மனப்பான்மையையும் அங்கு காண்கின்றோம். இராமலிங்க அடிகளாரின் பாடலும்தான் தோன்றிய நாளிலிருந்து இத்தகைய எதிர்ப்புக்கு இடமாயிற்று. இருந்தாலும் பொதுமக்கள் இலக்கியம் இந்த எதிர்ப்பையும் தாண்டி நிலைபெற்றிருப்பதை மேலே எடுத்துக் காட்டிய பெயர்களே விளக்கும். இருபதாவது நூற்றாண்டு பொதுமக்கள் நூற்றாண்டு . எனவே அவர்களின் இலக்கியம் வளர்வதிலும் அத்தகைய பழைய இலக்கியங்களிற் புதிய ஈடுபாடு எழுவதனையும் கூற வேண்டா. பழைய நாடகங்கள், கீர்த்தனைகள், பள்ளுகள், குறவஞ்சிகள், நாடோடிப் பாடல்கள் என்ற இவற்றில் அழிந்துபோனவை போக எஞ்சியவற்றை அச்சிட்டுக் காப்பாற்றும் முயற்சி இந்த நூற்றாண்டின் சிறப்பெனலாம். வள்ளல்களும் புரவலர்களும் தமிழைக் காத்த காலம் பழங்காலம். குடியரசில் தமிழைப் புரப்பார் குடிமக்களேயாவர். ஆதலின் அவர்கள் விரும்புவதான இலக்கியம் அமைவதே சிறப்பாம். இலக்கியப் படைப்பு முன்போலப் பொழுதுபோக்காகாமல் ஒருசிலரது பிழைக்கும் வழியாகவும் இன்று ஆகிவிட்ட நிலையில் பொதுமக்கள் வாங்கக்கூடிய சரக்கையன்றோ படைத்துத் தரவேண்டும்? இதனால் கீழான இலக்கியங்கள் வளரக் கூடுமானாலும் காலவெள்ளத்தையும் தாண்டிநிற்கக் கூடியவை சிலவேயாகும். பலர் பலவகையினரானாலும் அப்பலவகையினரையும் ஒரு சேர மகிழ்விக்கும் சிறப்புடைய இலக்கியங்கள் தலையெடுத்து விளங்கும். (10 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

கலைகளை பொதுவாக இரண்டு வகைகளிற் பிரிக்கலாம். சில கலைவகைகள் அறிவினாலேயே தெரிந்து பழகி இன்புறத்தக்கவை. அக்கலைகள் கொண்டு உடம்பு முயற்சியினால் தொழில் செய்ய இயலாது. இலக்கியம், இசை முதலியன இவ்வகையில் அடங்கும். சில கலைகள் அறிவினால் அறிந்து இன்புறுதலோடு உடம்பு முயற்சியினாலும் தொழில்கள் செய்து கொள்ளத்தக்கவை. பெரும்பாலும் மண், நீர், தீ, காற்று, வானம் என்னும் ஐந்து முதற்பொருள்களைப் பற்றி ஆராய்கின்ற இயற்கைப் பொருள் ஆராய்ச்சிகள் தொழில்கள் செய்வதற்கும் உதவும். இங்ஙனம் அறிவின்பத்திற்கு மட்டும் ஏதுவான கலையைப் பொதுவாக உணர்வுக் கலை என்றும் தொழிலுக்கு ஏதுவான கலையைப் பொருட்கலை என்றும் சொல்லலாம். சங்ககாலத்திலிருந்து தமிழ்மக்கள் இவ்விருவகைக் கலைகளிலும் வளம் பெற்றிருந்தனர். இவற்றைப் பற்றிக் கலைநூல்களும் அப்போது தனித்தனியே இயற்றப்பட்டிருந்தன. அதனால் அவர்களுக்கு அறிவு வளம், தொழில்வளம் என்னும் இருவகை வளங்களுஞ் செழித்திருந்தன. புறநானூற்றில்,“..................... விசும்பின் வலவன் ஏவா வான வூர்தி ....” என்று வருகின்ற வரிகளில் வானவூர்தியைப் பற்றி குறிப்பு வருகின்றது. இங்கே குறிப்பிடப்படுகின்ற ‘வானவூர்தி’ பாகனும் உடனிருந்து அவ்வப்போது இயக்கிக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயம் இல்லாதது. புலவர்களாற் பாடப்பெறுகின்ற தகுதியுடையோர் இத்தகைய வலவன் ஏவா வானவூர்தியிற் செல்லும் பெருமையை அடைவார்கள் என்று இந்நூல் கூறுகின்றது. ‘வலவன் ஏவா வானவூர்தி’ என்று இங்கே வருதலின் வலவன் ஏவும் வானவூர்திகளும் வேறே இருந்திருக்குமென்று தோன்றக் கூடும். இங்ஙனம் பாகன் உடன்செல்லாது, ஓரிடத்திலிருந்தே இயக்கிவிடும் வான் பொறிகளும், உடன் சென்று இயக்கும் வான் பொறிகளும் அமைத்துச் செல்வதற்குப் பொருட்கலை அறிவு மிகுதியாகத் தேவையாயிருக்கும் என்பது சொல்லாமலே அமையும்.

[ பக் 4 ஐப் பார்க்க

இனி, மேலே சொன்ன உணர்வுக்கலை, பொருட்கலை என்னும் இவ்விரண்டிலும் தனித்தனியே இரண்டிரண்டு பிரிவுகள் கொள்ளலாம். உணர்வுக் கலையிலும் இருவகை; பொருட்கலையிலும் இருவகை உணர்வுக் கலை என்பது மெய்யுணர்வுக் கலை என்றும், இன்பவுணர்வுக்கலை என்றும் பிரிவுபடும். 'மெய்யுணர்வுக் கலை' யானது, முற்றிலும் உணர்வு நிலையிலேயே உணரப்படுவது. சமயம், மெய்ப்பொருள் இவையும் உணர்வின்பத் தருபனவே. ஆனாலும், பொருள்களின் வாயிலாக அவ்வின்பத்தைப் பெறவேண்டியிருக்கின்றது.

இனிப்பொருட்கலை என்பது மேலே சொன்ன மண் முதலான ஐம்முதற் பொருள்களின் ஆராய்ச்சிகள் என்றும், அவற்றை வாழ்க்கைக்குப் பயன்படுத்தும் முறைகள் என்றும் இருவகையாகக் கொள்ளலாம். வானநூல் போன்றன முன்வகையிலும், கோள்நூல் போன்றன பின்வகையிலும் சேர்ந்தவை. இங்ஙனம் கலைகளை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்தறியலாம்.

(i) சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் அறிவு, தொழில் நிலைகளில் வளம் பெற்றுத் திகழ்ந்தமைக்கான அடிப்படைகள் யாவை?

(ii) மெய்யுணர்வுக் கலையிலிருந்து இன்பவுணர்வுக் கலை எவ்வகையில் வேறுபடுகின்றது?

(iii) வானநூல், கோள்நூல் என்பன பொருட் கலையின் எவ்வகைப் பிரிவுகளுக்கான எடுத்துக்காட்டுக்களாக அமைகின்றன?

(iv) 'வலவன் ஏவா வானவூர்தி' என்ற தொடரின் மூலம் கட்டுரையாசிரியர் எவ்வகையான முடிவுகளை முன்வைத்துள்ளார்? (10 புள்ளிகள்)

3 பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து **300-350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) இணையமும் தமிழும்

(ஆ) இலக்கியங்களில் இயற்கை

(இ) பதிப்புப் பணியில் சி.வை. தாமோதரம்பிள்ளை

(ஈ) திரைப்படப் பாடல்களில் நாட்டாரிலக்கியத்தின் செல்வாக்கு

(உ) "நினைவு நல்லது வேண்டும்." (20 புள்ளிகள்)

## பகுதி II

### பகுதி 'அ'

**4.** (அ) புறத்திணை என்றால் என்ன?

(ஆ) சங்ககாலத்தில் எழுந்த புறத்திணை இலக்கியங்களை எடுத்துக் காட்டுக.

(இ) மன்னனுக்கு நல்லறிவூட்டும் பண்பு சங்கப்பாடல்களில் வெளிப்படுமாற்றினை எடுத்துக் காட்டுக. (15 புள்ளிகள்)

**5.** (அ) பக்தி இலக்கியப் பொருண்மை சங்ககாலத்திலேயே செல்வாக்குப் பெற்றிருந்தமையை எடுத்துக் காட்டுக.

(ஆ) பக்தி இலக்கிய வளர்ச்சிக்குக் காரைக்காலம்மையாரின் பங்களிப்பைத் தெளிவுபடுத்துக.

(இ) பக்தி உணர்வைப் பரவலடையச் செய்ய நாயன்மார்களும் ஆழ்வார்களும் கையாண்ட உத்திகளைக் குறிப்பிடுக. (15 புள்ளிகள்)

**6.** (அ) ஐரோப்பியர் காலத்தில் தமிழ்வளர்ச்சிப் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டமைக்கான காரணங்கள் யாவை?

(ஆ) இக்காலப்பகுதியில் தமிழ் வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களைத் தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)

### பகுதி 'ஆ'

**7.** (அ) ஒல்லாந்தர் காலப்பகுதியில் தோற்றம் பெற்ற சமயச் சார்பான இலக்கியங்களை எடுத்துக்காட்டுக.

(ஆ) சமயச் சார்பான இலக்கியங்கள் இக்காலப்பகுதியில் அதிகளவில் எழுந்தமைக்கான காரணங்கள் யாவை?

(இ) இக்காலத்து சமயச் சார்பற்ற இலக்கியங்கள் குறித்துக் குறிப்புரை வரைக. (15 புள்ளிகள்)

**8.** (அ) ஈழத்து நவீன தமிழ்க் கவிதைக்குரிய பண்புகள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியிலே துளிர்விட்டமைக்கான ஆதாரங்களைத் தருக.

(ஆ) நவீன தமிழ்க் கவிதைக்குரிய பண்புகள் சுதந்திரத்துக்குப் பின்னர் வளர்த்தெடுக்கப்பட்ட வகையினைச் சுருக்கமாக எடுத்துக்காட்டுக.

(இ) ஈழத்து நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சிக்கு மகாகவி உருத்திரமூர்த்தியின் பங்களிப்பினைச் சுருக்கமாக மதிப்பிடுக. (15 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education